

# இந்திய வம்சாவளி மக்கள் தலைநகரில் சரிநிகர் சமமாக வாழும் நிலை வரும்

## ஐ.ம.சு.மு. வேட்பாளர் மிலிந்த மொறகொட

தலைநகர் வாழ் இந்திய வம்சாவளி மக்கள் சரிநிகர் சமமாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவேன் எனத் தெரிவித்தார் கொழும்பு மாநகரசபை முதன்மை வேட்பாளர் மிலிந்த மொறகொட.

'வீரகேசரி' வாரவெளியீட்டுக்கு அளித்த விசேட செவ்வியொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''தலைநகரில் வாழும் பல இலட்சம் இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரத்தியேகமான பிரச்சினைகள் உண்டு. அவர்களுக்கே உரித்தான வாழ்க்கை முறையும், பண்பாடும் உண்டென்பதை தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? அவர்களின் மேம்பாட்டிற்காக எவ்வகையான வேலைத் திட்டத்தை முன்வைத்திருக்கிறீர்கள்?'' என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மிலிந்த மொறகொட மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து விரிவாக விளக்கமளித்த அவர் தெரிவித்ததாவது,

கொழும்பு நகரில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், இந்திய கொழும்புச் செட்டி சமூகத்தினர், மலாயர், போராமார் பார்ஸி இனத்தவர் என பல்லின மக்கள் வாழும் ஒரு அமைதியான இடமாகும். நெருக்கடியான காலகட்டங்கள் தவிர்ந்து இவ்வின மக்கள் மிகுந்த ஒற்றுமையுடன் பரஸ்பர நட்புணர்வுடன் உதவி ஒத்தாசையுடன் வாழ்பவர்கள். இவர்களிடையே ஒவ்வொரு சமூகத்தினரின் தனித்தன்மை, பண்பாடு, அந்நியோன்ய அடையாளம் ஆகியவை அங்கீகரிக்கப்பட வேண்டும். அந்த நிலைப்பாட்டில் நான் எப்போதும் இருந்து வந்திருக்கின்றேன். எனது கொள்கை விளக்கத்திலே பலதரப்பட்ட கலாசார நிகழ்ச்சிகளுக்குப் பாதுகாப்பளித்தல் மற்றும் அவற்றைச் சிறப்புற கொண்டாடுதல் என்னும் தலைப்பிலே மிக விளக்கமாகத் தெரிவித்துள்ளேன்.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பல இலட்சம் பேர் அன்று முதல் இன்று வரை கொழும்பின் சமூகப் பொருளாதாரத் துறைகளில் மிக முக்கிய பங்களிப்புச் செய்து வருகின்றார்கள். சமூகத்தின் பல்வேறு துறைகளில் பல்வேறு தரங்களில் பல்வேறு மட்டங்களில் இவர்களின் பங்களிப்பு,உழைப்பு, கொழும்பு நகரின் இயல்பான இயக்கத்திற்கு அவசியமாகவுள்ளது.

இம்மக்களுக்கு பிரதான பிரச்சினையாக உள்ள தமது மொழியிலேயே தமக்குரிய அரச மற்றும் பொது அலுவல்களை மேற்கொள்வதற்கான உரிமை குறித்த உத்தரவாதத்தை நான் அளிக்கின்றேன்.

**கொழும்பு மாநகர சபையை மெட்ரோபொலிடன் கூட்டுத்தாபனம் அல்லது ஒரு அதிகார சபையின் கீழ் கொண்டு வருவது பற்றி பேசப்பட்டதே. அது எந்த அளவில் இருக்கின்றது?**

மாநகரசபைகள் கூட்டுத்தாபனம் என்ற நிலைக்கு உயர்வது உள்ளூராட்சி வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும். பல நாடுகளிலே இவ்வாறான மெட்ரோ பொலிடன் கூட்டுத்தாபனங்கள் இயங்கி வருகின்றன. உதாரணதிற்கு சென்னை மாநகரசபை கூட்டுத்தாபனத்தை எடுத்துக் கொள்ளலாம். இது இன்னமும் பேச்சு வார்த்தை என்ற அளவிலேதான் இருக்கின்றது. இதனுடைய சாதக பாதகங்களை Trial and Error என்ற முறையால்தான் பார்க்க வேண்டும்.

**இலங்கையில் டெங்குக் காய்ச்சலினால் எப்போதும் மோசமான பாதிப்பு நிலவி வருகின்றது. தலைநகரில் டெங்கு ஒழிப்பிற்காக என்ன செய்ய உத்தேசித்திருக்கின்றீர்கள்?**

டெங்கு ஒழிப்பில் தலைநகரைப் பொறுத்தவரை முக்கிய பொறுப்பு மாநகர சபைக்கு உள்ளதென்பது உண்மையே. அதேபோன்று பொது மக்களுக்கும், அரசுக்கும் இருக்கின்றது. மூன்று சாராரும் இணைந்து அவரவர் கடமையை நிறைவேற்றினாலே இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம்.

டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக ஏற்கெனவே சில வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றை முழுமையாகச் செயற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். குறைபாடுகளிருப்பின் அவற்றை நீக்கி புதிய திருத்தங்களைச் சேர்க்க வேண்டும். எது எப்படியென்றாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். சில உத்தேச வேலைத்திட்டங்களை முன்வைக்கலாம். இப்படியான உத்தேச வேலைத்திட்டங்களை நான் என் தேர்தல் விஞ்ஞாபனத்திலே முன்வைத்திருக்கின்றேன்.

**'நகரை அழகுபடுத்துதல்' என்ற பெயரில் காலி வீதியில் உள்ள பழைய இரும்புக் கடைகள் (போத்தல் கடைகள்) போன்றவற்றை அகற்றுவதற்கு திட்டமுள்ளதாகத் தெரிகின்றது. இவ்வியாபாரத்தை பெரும்பாலும் சிறுபான்மை இனத்தவர்களே நடத்தி வருகின்றார்கள். இதுபற்றி?**

இதுபற்றி சிறுபான்மை மக்களுக்கு அச்சத்தை ஊட்டி இதனால் பயன் பெற ஒரு சாரார் முயன்று வருகின்றார்கள். அவர்கள் எத்தகையவர்கள் என்று நான் ஏற்கெனவே ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருக்கின்றேன்.

இலங்கையின் பலதரப்பட்ட மக்களிடையே வர்த்தகப் பிரஜைகளே மிகுந்த புரிந்துணர்வுடையவர்களாவர்கள். அவர்களுடன் ஏனையவர்களைவிட எளிதில் கலந்து பேசி எந்தப் பிரச்சினையையும் தீர்த்துக்கொள்ளலாம். அவர்களின் நலன்களைப் பாதிக்காத மாற்றுத் திட்டங்களை அவர்கள் எப்போதும் ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே, இதில் பிரச்சினை ஏற்படுவதற்கு எந்தவித வாய்ப்பும் இல்லை.

**அரசு எத்தனையோ ஏற்பாடுகள் செய்தாலும் தமிழ்மொழி அமுலாக்கல் விடயத்தில் எல்லாத் துறைகளிலும் குறைபாடு காணப்படுகின்றதே?**

மாநகர சபையின் அனைத்து அலுவலகங்களிலும் மொழி பெயர்ப்பாளரை நியமிப்பதும் தேவையான அலுவலகங்களுக்கு தொலைபேசி மூலம் மொழிபெயர்ப்புச் சேவையை வழங்குவதும் தமிழ் மொழி அமுலாக்கல் சம்பந்தமாக முன்னெடுக்கவுள்ள ஆரம்ப செயற்திட்டங்களாகும்.